E2 (1)
1487/23
4661/2021

பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் (FAC), சென்னை–6, அவர்களின்
செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : மரு.V.P. ஹரிசுந்தரி, எம்பிபிஎஸ்., டிசிஎச்.,

நாள்: 24.03.2023

ந.க.எண்.60371/நிபி8/1/2022

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.ரா.ஸ்ரீதர், (த/பெ. (லேட்) திரு.ராஜாராம், மருத்துவமனைப் பணியாளர், அரசு மருத்துவமனை, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி
13 APR 2023
திருவண்ணாமலை

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.18, தொழிலார் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2) அரசு கடித எண்.8014/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 20.05.2021.
3) இவ்வியக்க கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.58196/நிபி8/1/2021, நாள் 04.10.2021.
4) இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.59016/நிபி2/2/2021, நாள் 05.10.2021.
5) திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் அவர்களின் கடித ந.க.எண்.4661/நி2(1)/2021, நாள் 29.09.2022 மற்றும் 03.01.2023.

------

**ஆணை :**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, அரசு மருத்துவமனையில் மருத்துவமனைப் பணியாளராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போது 19.11.2008 அன்று இயற்கையெய்திய திரு.ராஜாராம் என்பவர் 10.04.1990 பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, 09.04.1991 பிற்பகல் தகுதிகாண்பருவம் முடித்துள்ளார், அவரின் பிறந்த தேதி 03.05.1960, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 31.05.2020 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மகன் திரு.ரா.ஸ்ரீதர் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)–ன்படி,

2

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, அரசு மருத்துவமனையில் மருத்துவமனைப் பணியாளராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும் போது 19.11.2008 அன்று இயற்கையெய்திய திரு.ராஜாராம் என்பவரின் மகனும் வாரிசுதாரருமாகிய திரு.ரா.ஸ்ரீதர் (பிறந்த தேதி 02.07.1992) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் ரூ.19500-62000/- நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பார்வை-3இல் காணும் ஆணைப்படி பணிநியமனம் செய்யப்பட்டு, பார்வை-4இல் காணும் பணியமர்த்தல் ஆணைப்படி, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரியில் 16.10.2021 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ரா.ஸ்ரீதர் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-1இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 16.10.2021 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

V.P. ஹரிசுந்தரி,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர் (FAC)

பெறுநர்
திரு.ரா.ஸ்ரீதர்,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவக் கல்லூரி, திருவண்ணாமலை.
திருவண்ணாமலை மாவட்டம்.
-- அரசு மருத்துவக் கல்லூரி திருவண்ணாமலை முதல்வர் மூலமாக.

நகல்
1) மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை-10.
2) அரசு மருத்துவக் கல்லூரி, திருவண்ணாமலை.
3) நிர்வாகப்பிரிவு - 2.
4) இருப்புக்கோப்பு / உபரி -1.

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இணை இயக்குநர் (நிர்வாகம்)

ந.க.எண். 1661/நி2(1)/2021

முதல்வர் அலுவலகம்,
அ.தி.ம.க, தி.மலை.
நாள்: 17.04.2023.

பெறுநர் அனுப்பப்படுகிறது.
1. திரு. ரா. ஸ்ரீதர்,
இளநிலை உதவியாளர்,
அ.தி.ம.க, தி.மலை
... - உரிய வழியாக.

N. R. Ramesh 17/4/23
Administrative Officer,
Govt. Thiruvannamalai Medical College,
Thiruvannamalai-606 604.

Received.
K. 17/4/23